**தொகுதி 2 – வருமானம் மற்றும் வரிகள் செயற்பாட்டுத் தாள் 2-4**

**மரியா மற்றும் ஃபெர்னான்டோவின் கதை**

மரியாவும் அவரது கணவர் ஃபெர்னான்டோவும் ஒரு பெரிய அலுவலக கட்டடம் ஒன்றை இரவில் சுத்தம் செய்வதில் ஒன்றாக வேலை செய்தார்கள். பெரிய க்ளீனிங் கம்பனியை நடத்துகின்ற ஒருவரால் அவரகள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மாதத்திற்கு இருமுறை சம்பளக் காசோலையைப் பெற்றார்கள்.

ஃபெப்ரவரி மாதத்தில், அவர்களது முந்தைய ஆண்டின் வருமானத்திற்கான வருமான வரியை செய்யும் நேரம் வந்தது. தங்கள் க்ளீனிங் கம்பனி ஆளிடம் T4 துண்டை கேட்டார்கள். அவர் வருமான வரியாக அரசுக்கு எவ்வளவு அனுப்பினார் என்பதை தங்கள் டாக்ஸ் ரிட்டர்னில் காட்டவேண்டியிருந்தது.

அதற்கு அவர் கூறினார், " நீங்கள் பணியாளர்கள் அல்ல. நீங்கள் கொன்ட்ராக்டர்கள்."

அந்த மனிதர் அவர்களுக்காக அரசுக்கு எந்த வருமான வரியும் அனுப்பியிருக்கவில்லை. " நீங்கள் சுய-தொழில் செய்பவர்கள்" என்று அவர் கூறினார்.

மரியா மற்றும் ஃபெர்னான்டோவுக்கு வருமானம் இருந்தது, ஆனால் அவர்கள் வரி எதுவும் கட்டியிருக்கவில்லை. அவர்கள் சுய-தொழில் செய்வதாக நினைக்காததால் வரிசெலுத்த பணம் ஒதுக்கவில்லை.

அத்தோடு தங்கள் செலவுகளுக்கான ரசீதுகளை அவர்கள் வைத்திருக்கவில்லை. ரசீதுகள் இல்லாமல் வியாபார வருமான வரி குறைப்பை அவர்களால் கோர முடியவில்லை.

அரசுக்கு சேரவேண்டிய வருமான வரியையும் CPP யும் கட்ட தங்கள் சேமிப்பை உபயோகிக்க வேண்டியதாயிற்று.

மரியாவும் ஃபெர்னான்டோவும் பணியாளர்களா அல்லது சுய-தொழில் கொன்ட்ராக்டர்களா?

அவர்கள் பணியாளர்கள் என்றால் அவர்களின் முதலாளியிடமிருந்து அவர்கள் என்ன பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்?

அவர்கள் கொன்ட்ராக்ட் கிளீனர்களாக வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள் என்றால், அடுத்த வருட வரிக் காலப் பகுதியில் நன்கு தயாராக இருக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும்?

மரியாவுக்கும் ஃபெர்னான்டோவுக்கும் கேள்விகள் இருந்தால்
அவர்கள் யாரிடம் பேசவேண்டும்?